உ
சிவமயம்
அருள்மிகு தெண்டாயுதபாணி துணை







## சிங்கப்பூர் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின்

# அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோயில்

# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

**விநாயகர் துதி**

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

**முருகன் துதி**

எந்தா யுமெனக் கருள் தந்தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே!

**சிவபெருமான் துதி**

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமைநன் னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச் சிவாயவே!

**உமையம்மை துதி**

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும்பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே!

**சிங்கப்பூர் தெண்டாயுதபாணி பாடல்**

சேவடி நாளுந் தொழுதெழு வாரையித் திண்புவியில்
யாவரும் வந்தித் தடிதொழ வைப்பானிமையவரும்
மூவரும் வந்து துதிசெயச் சிங்கப்பூர் முன்னியமர்
காவலன் தெண்டாயுத பாணி யாமெங்கள் கற்பகமே!

பேரன்புடையீர்,

செல்வம் கொழிக்கும் சிங்கப்பூர்த் திருநாட்டில் மகுடதன வணிகர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் நூற்று அறுபத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன் (04.04.1859இல்) தேங் ரோட்டில் நிறுவி வழிபட்டு வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் **அருள்மிகு ஜம்பு விநாயகர், அருள்மிகு தெண்டாயுதபாணி, அருள்மிகு சுந்தரேஸ்வரர், அருள்மிகு மீனாட்சி அம்மன், நவக்கிரகம் முதலான பரிவாரமூர்த்திகளுக்கும்** நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் வைகாசி மாதம் 18-ம் தேதி **(01.06.2023)** வியாழக்கிழமை சுக்லபட்சம் துவாதசி திதியும் ஸ்வாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய நன்னாளில் சூரிய உதயாதி நாழிகை 05.00 க்கு மேல் 7.30 நாழிகைக்குள் காலை 9.00 மணிக்கு மேல் 10.00 மணிக்குள் மிதுன லக்னம் கூடிய சுபமுகூர்த்தத்தில் **சிங்கப்பூர் அருள்மிகு தெண்டாயுதபாணி ஆலய மஹா கும்பாபிஷேக திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா** நடைபெறும். பக்தகோடி மெய்யன்பர்கள் அனைவரும் வந்து மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டுகளித்து அருள்மிகு தெண்டாயுதபாணியின் திருவருள் பெற வேண்டுகிறோம்.

## திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்ச்சி நிரல்

| தமிழ்த் தேதி | ஆங்கிலத் தேதி | கிழமை | நேரம் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|---|
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>10-ம் தேதி | 24.05.2023 | புதன் | காலை 06.45 மணி<br><br>காலை 09.30 மணி<br>காலை 10.00 மணி<br>மாலை 06.15 மணி<br>இரவு 08.30 மணி | மங்களஇசை, அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம், கோ பூஜை<br>ராஜகோபுர துவார பூஜை, மஹா கணபதி ஹோமம், தன பூஜை<br>பூர்ணாஹுதி, தீபாராதனை<br>விநாயகர் அபிஷேகம், தீபாராதனை பிரசாதம் வழங்குதல்<br>மங்கள இசை, ஷோடசதீபலக்ஷ்மி பூஜை<br>தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>11-ம் தேதி | 25.05.2023 | வியாழன் | காலை 08.45 மணி<br>காலை 11.00 மணி<br>மாலை 06.15 மணி<br>இரவு 08.30 மணி | மங்கள இசை, நவக்கிரக ஹோமம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, நவக்கிரகங்களுக்கு கலசாபிஷேகம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>மங்கள இசை, பிரவேச பலி, ரட்ஷோக்ன ஹோமம்,<br>தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>12-ம் தேதி | 26.05.2023 | வெள்ளி | காலை 08.45 மணி<br>காலை 11.30 மணி<br>மாலை 05.45 மணி<br>இரவு 08.00 மணி | மங்கள இசை, சாந்தி ஹோமம், திசா ஹோமம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>மங்கள இசை, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரஹனம்<br>தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>13-ம் தேதி | 27.05.2023 | சனி | காலை 05.15 மணி<br>காலை 07.30 மணி<br>காலை 11.30 மணி<br>மாலை 04.30 மணி<br>இரவு 07.00 மணி<br>இரவு 09.00 மணி | மங்கள இசை, ஸ்கந்த ஹோமம், மூர்த்தி ஹோமம், சம்ஹிதா ஹோமம், பிரசன்னா அபிஷேகம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, கலசாபிஷேகம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>பரிவார கலாகர்ஷணம்<br>மங்கள இசை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்<br>கடஸ்தாபனம், முதல் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>14-ம் தேதி | 28.05.2023 | ஞாயிறு | காலை 08.45 மணி<br>காலை 11.30 மணி<br>மாலை 05.15 மணி<br>இரவு 07.00 மணி<br>இரவு 08.30 மணி | மங்கள இசை, விசேஷ சந்தி, இரண்டாம் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>மங்கள இசை, விசேஷ சந்தி, மூன்றாம் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>அஸ்வ பூஜை<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>15-ம் தேதி | 29.05.2023 | திங்கள் | காலை 08.00 மணி<br>காலை 10.00 மணி<br>காலை 11.30 மணி<br>மாலை 05.15 மணி<br>இரவு 07.00 மணி<br>இரவு 08.30 மணி | மங்கள இசை, விசேஷ சந்தி, நான்காம் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>நவரத்தின ஸ்தாபனம், தங்கம் வெள்ளி வைத்தல்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>மங்கள இசை, விசேஷ சந்தி, ஐந்தாம் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>யந்திர ஸ்தாபனம், அஷ்டபந்தனம் சாத்துதல்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>16-ம் தேதி | 30.05.2023 | செவ்வாய் | காலை 08.15 மணி<br>காலை 08.30 மணி<br>காலை 11.30 மணி<br>மாலை 05.15 மணி<br>இரவு 08.30 மணி<br>இரவு 09.00 மணி | மங்கள இசை, விசேஷ சந்தி, ஆறாம் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>எண்ணெய் சாத்துதல்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>மங்கள இசை, விசேஷ சந்தி, ஏழாம் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>எண்ணெய் சாத்துதல் பூர்த்தி |
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>17-ம் தேதி | 31.05.2023 | புதன் | காலை 08.00 மணி<br>காலை 11.30 மணி<br>மாலை 05.15 மணி<br>இரவு 07.30 மணி<br>இரவு 08.30 மணி<br>இரவு 09.00 மணி | மங்கள இசை, விசேஷ சந்தி, எட்டாம் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>மங்கள இசை, விசேஷ சந்தி, ஒன்பதாம் கால யாக பூஜைகள் ஆரம்பம்<br>லெட்சுமி பூஜை, தீபஸ்தாபனம்<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>பிம்பசுத்தி ரக்ஷாபந்தனம் |
| சோபகிருது ஆண்டு<br>வைகாசி மாதம்<br>18-ம் தேதி | 01.06.2023 | வியாழன் | காலை 05.15 மணி<br>காலை 08.00 மணி<br>காலை 08.30 மணி<br>காலை 09.00 முதல்<br>09.30 மணி வரை<br>காலை 09.30 முதல்<br>10.00 மணி வரை<br>காலை 10.30 மணி<br>மாலை 04.00 மணி<br>இரவு 07.00 மணி | மங்கள இசை, பத்தாம் கால யாக பூஜைகள் ஆரம்பம், நாடி சந்தானம், ஸ்பரிசாஹுதி<br>மஹாபூர்ணாஹுதி, மஹாதீபாராதனை, யாத்ராதானம்<br>கடம் புறப்பாடு<br>**இராஜகோபுரம்** மற்றும் **விமான மஹா கும்பாபிஷேகம்**<br>மூலவர் **மஹா கும்பாபிஷேகம்**, மஹாதீபாராதனை, அருட்பிரசாதம் வழங்குதல்<br>பட்டு சாத்துதல், வரிசை எடுத்தல்<br>மஹாபிஷேகம்<br>விசேஷ தீபாராதனை, ரதம் புறப்பாடு, பிரசாதம் வழங்குதல் |
| வைகாசி மாதம் 19-ம்<br>தேதி,முதல் ஆனி மாதம்<br>30-ம் தேதி வரை | 02.06.2023 முதல்<br>15.07.2023 வரை | வெள்ளி முதல்<br>சனி வரை | மாலை 04.00 மணி<br>மாலை 06.30 மணி<br>இரவு 07.00 மணி | மண்டலாபிஷேகம்<br>தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>கலை நிகழ்ச்சிகள் ஆரம்பம் |
| ஆனி மாதம்<br>31-ம் தேதி | 16.07.2023 | ஞாயிறு | காலை 09.00 மணி<br>இரவு 07.00 மணி | மண்டலாபிஷேகம் பூர்த்தி 108 கலசாபிஷேகம்<br>விசேஷ தீபாராதனை, ரதம் புறப்பாடு |

**குறிப்பு** யாகசாலை பூஜை நேரங்களில் வேதபாராயணம், சிவாகம பாராயணம், திருமுறை பாராயணங்களும், நாதஸ்வர இன்னிசையும் நடைபெறும்.

சிங்கப்பூர்
05.04.2023

சிங்கப்பூர்த் தெண்டா யுதபாணி சேவடிகள்
மங்கலங்க ளீந்துநனி வாழியவே - அங்கவற்கு
நற்பணிகள் செய்யும் நகரத்தார் வாழியரோ
பொற்புடனே வாழ்க புவி!

அனைவரும் வருக!
இறையருள் பெறுக!

இங்ஙனம்
**சிங்கப்பூர் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்**